RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/ irjt224s-22269

# சிலப்பதிகாரத்தில் பல்தெய்வ வழிபாட்டு மரபுகள்

**இரா. சதாசிவம் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, தமிழியல்துறை. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்-608002 தமிழ்நாடு, இந்தியா

# Various Worshiping Traditions in Silapathikaram

**R. Sathasivam [a, *]**

[a] Department of Tamil Studies, Annamalai University, Annamalainagar-608002, Tamil Nadu, India

* Corresponding Author: sathasivambothi@gmail.com

Received: 25-09-2022
Revised: 06-11-2022
Accepted: 18-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

Greetings and worship have been followed for many years, Tamil literature highlights that people have been living in different parts of the land and it can be seen that there were separate deities worshiped for each part of the land. In the inner life and in the outer life, the worship of the deity has achieved excellence and it can be known through the life and worship of the ancients. Rituals are associated with human culture. There is a belief among the people that the work undertaken after worshipping deities and the work will be successful and will end well. Thus, worships have become one of the cultural traditions. Silappathikaram is a versatile repository with many known news items. Considering the contribution to the history of Tamil Nadu during the Sangam period and the knowledge of the traditions followed by the Tamils, the multifaceted traditions of deity worship in Silapathikaram are examined in this article.

**Keywords:** Silapathikaram, Worship, Rituals, Sangam Literature

## முன்னுரை

மானுட வாழ்வில் வாழ்த்தும் வழிபாடும் பல்லாண்டுகளாக வழக்கிலிருந்து வந்துள்ளதனை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. தொல்காப்பியத்தில் பல்வேறு நிலப்பகுதிகளில் மக்கள் வாழ்ந்து வந்தமையும் ஆங்கு ஒவ்வொரு நிலத்திற்குமான தனித்தெய்வ வழிபாடுகள் இருந்தமையினைக் காணலாம். அக வாழ்விலும் புற வாழ்விலும் தெய்வ வழிபாடு சிறப்பிடம் பெற்றுள்ளதனைப் பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் கொண்டு அறியலாம். வழிபாடுகள் மானுட சமுதாயத்தின் பண்பாட்டோடு தொடர்புகொண்டனவாகத் திகழ்கின்றன. வழிபாடுகளால் வெற்றி கிட்டும், எடுத்துக் கொண்ட செயல் நல்லவிதமாக முடியும் என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்துள்ளது.அவ்வகையில் வழிபாடுகள் பண்பாட்டு மரபுகளில் ஒன்றாக அமைந்திருக்கின்றன. சிலப்பதிகாரம் பல்துறைக் களஞ்சியமாகத் திகழும் தன்மை கொண்ட காப்பியமாகும். இவற்றால் அறியப்படும் செய்திகள் பலப்பலவாகும். சங்க மருவிய காலத் தமிழக வரலாற்றிற்கும், தமிழர்கள் பின்பற்றிய மரபுகள் பற்றிய அறிதலுக்கும் துணைநிற்பதனைக் கருத்தில் கொண்டு சிலம்பில் பல்துறை தெய்வ வழிபாட்டு மரபுகள் குறித்து ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

## பண்டைத்தமிழர் வழிபாட்டு மரபுகள்

தொல்பழங்காலத்தில் இயற்கை வழிபாடே வழக்கிலிருந்துள்ளது. காலப்போக்கில் ஆவியுலகக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவானதே தெய்வவழிபாடு ஆகும். இதனை “கல், மரம், மண் முதலிய

இயற்கைப் பொருள்கள் கடவுளாகக் கருதப்பட்டன. தொடக்கக்காலத்தில் நாட்டுப்புற மக்கள் கற்களிலும், மரங்களிலும், பிற இயற்கைப் பொருள்களிலும் கடவுள் இருந்ததாகக் கருதி வழிபட்டனர்" என்னும் ந. சுப்பிரமணியன் கூற்றின்வழியாகவும் அறிந்து கொள்ளலாம். இயற்கையில் இறைவன் இருப்பதனை உறுதிப்படுத்தியதன் விளைவே கோயில்களில் இயற்கைப் பொருட்கள் வழிபாட்டுக்கு உரியனவாக அமைந்தன. இவற்றை அடிப்படையாகக் கொண்டே இன்றையத் தலங்களில் மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்பவை சிறப்பிக்கப்படுகின்றன (Subramaniyan, 1965) .

## சிலப்பதிகாரத்தில் பல்தெய்வ வழிபாடுகள்

கடவுள் வழிபாடு என்பது வெறும் சடங்கன்று. வழிபாடு என்பது உயிர்ப்புள்ள ஒரு முயற்சி. அறிவார்ந்தவற்றை எண்ணுதல் நினைத்தல் ஆகிய அக நிலைப்பயிற்சிகள் மூலம் ஆன்மா தம்மை உயர்த்திக் கொள்வதற்குத் துணை செய்வது வழிபாடு (Srinivasan, 1975). வழிபாடு கடவுளை முன்னிறுத்திச் செய்யப்படுவது. ஆனால், வழிபாட்டின் பயன் கடவுளுக்கன்று. வழிபாட்டின் பயன் முழுதும் மனிதத்துக்கேயாம். மனித வாழ்வு சிறக்கக் கடவுளின் துணை தேவைப்படுகின்றது என்பதனையே வழிபாடுகள் காட்டுகின்றன (Srinivasan, 1975).

சிலப்பதிகாரத்திற்குப் பல்வேறு சிறப்புகள் உள்ளன. அது சமயப்பொதுமைக் காப்பியமாகத் திகழ்வதனையும் அதில் இடம்பெற்றுள்ள பல்தெய்வ வழிபாடுகள் வழியாக அறிந்துகொள்ளலாம். சிலப்பதிகாரத்தில் சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, முருக வழிபாடு, பலதேவ வழிபாடு, இந்திர வழிபாடு, பத்தினித் தெய்வ வழிபாடு, சாத்தன் வழிபாடு, கொற்றவை வழிபாடு, இயக்கி வழிபாடு , பூத வழிபாடு முதலான தெய்வ வழிபாட்டு முறைகள் வழக்கிலிருந்துள்ளன. இவற்றால் அக்காலச் சமய வழக்காறுகள் வழக்கிலிருந்தமை தெளிவாகிறது. பல்சமய அறிவுக்களமாகப் புகார் நகரம் விளங்கியமை தெளிவாகிறது. இத்தகு வழிபாட்டுக் கூறுகள், வழிபாடு நிகழ்த்தப்பட்ட திறம் ஆகியன தனித்தனியே விளக்கப்படுகின்றன.

## சிவ வழிபாட்டு முறைகள்

முக்கண்ணனாகிய சிவபெருமான், சங்கப் பாடல்களில் 'சிவன்' என்ற சொல்லால் குறிக்கப் பெறாது பிற சொற்களாலே குறிக்கப் பெறுகிறான். அதாவது சங்க இலக்கியத்தில் சிவன் என்ற நேர்ச்சொல்லே இல்லை. அதற்கு மாற்றாக ஆதிரையான், ஆலமர் செல்வன், ஆனேற்றுக் கொடியுடையான், ஈசன், ஈர்ஞ்சடை அந்தணன், காலக்கடவுள், தாழ்சடைப் பெரியோன், நீலமேனி வாலிழைபாகத்து ஒருவன், மணிமிடற்றன், முக்கட் செல்வன் என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகிறான். எனவே சக்தியாகிய பெண் தெய்வங்களுடனும், தன் திருமேனிக்கு உரிய பெயர்களுடனும் சங்க இலக்கியங்களில் சிவபெருமான் இடம் பெற்றுள்ளான். வழிபாட்டில் அவனுக்கென்று தனியே கோயில் அமைத்து வழிபடும் வழக்கமும், ஊருக்கு நடுவே மன்றங்கள் அமைத்து வழிபடும் வழக்கமும் இருந்தமை சங்க இலக்கியங்களில் குறிப்புகளாக இடம்பெற்றுள்ளன.

சைவ சமயத்தின் தலைமைக் கடவுளாக விளங்கும் சிவனுக்கெனப் புகார் நகரில் தனியாகக் கோயில்கள் இருந்தமையினையும், ஆங்கு வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்றமையினையும்,

சிலப்பதிகாரத்தில்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்" (Adiyarku Nallar, 1980)

என்பதில் பிறப்பில்லாத ஒருவன் என்ற பொருள்படவும், சிவபெருமானின் தொழில்களில் முதன்மையானது அழித்தல் தொழிலே ஆகும் என்ற கருத்தினை விளக்கும் விதத்தில்,

"அருந்தெறற் கடவுள் அகன் பெருங்கோயிலும்" (Adiyarku Nallar, 1980)

என்றும் குறிக்கப்படுகின்றன. நெற்றியில் பிறைக்கண்ணைக் கொண்டவன் சிவபெருமான் என்பதனைக் குறிக்கும் விதத்தில்,

"நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்" (Adiyarku Nallar, 1980)

என்றும் குறிக்கப்படுகின்றான்.

நிலவுக்கதிர் முடித்த நீண்ட பெரிய முடியையும், உலகத்தையும் தான் ஒருவனாகத் தன் கைப்படுத்தும் திறமும் வியந்து கூறும் விதத்தில்,

"உலகு பொதி உருவத்து உயர்ந்தோன் சேவடி

செஞ்சடைக் கடவுள்" (Adiyarku Nallar, 1980)

என்றும் குறிக்கப்படுகிறான். இப்பாடலடிகளில் இடம்பெறும் 'உம்' விகுதியால் இன்னும் பல கோயில்களும் இடம்பெற்றுள்ளதனைக் குறிப்பால் உணர்த்தக் காணலாம். இக்கோயில்களில், வழிபாடுகள் மற்றும் வேள்விகள் யாவும் செய்யப்பட்டன என்பதும் அவை நான்மறை மரபுகளின்படி நடத்தப்பட்டன என்பதும் இளங்கோவடிகளால் சுட்டப்படுகின்றது. மேலும் வழிபாட்டின் போது நறும் மலர் சூட்டியும், நறும்புகை காட்டியும், வேதங்கள் ஓதியும் வழிபட்டனர் என்ற குறிப்பும் இடம்பெற்றுள்ளது.

## திருமால் வழிபாட்டு மரபுகள்

தமிழர்களின் தொல் தெய்வ வழிபாடுகளில் ஒன்றாக 'மாயோன்' வழிபாடு குறிக்கப்படுகிறது. முல்லை நிலத்தினன் தலைமைக் கடவுளாகிய மாயேன், உயிர்களைக் காக்கும் தொழிலுக்கு உரியனாக விளங்குகிறான். ஆதலால், படைத்தல் தொழிலிலும் காத்தல் தொழில் சிறப்புக்கு உரியதாகக் குறிக்கப்படுகிறது. இத்தகு சிறப்புமிக்க திருமாலுக்கெனத் தனித்த கோயில்கள் புகார் நகரத்தில் இருந்தமையினையும் ஆங்கு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டமையினையும் சிலப்பதிகாரம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

திருமாலின் மேனி அழகு நீலநிறம் கொண்டதாகும். அத்தகு நீலநிறம் கொண்டவன் திருமால் என்பதனை,

"நீலமேனி நெடியோன் கோயிலும்" (Adiyarku Nallar, 1980)

என்னும் பாடலடி எடுத்துரைக்கிறது. இதனூடே திருமாலின் அவதாரங்களில் ஒன்றான உலகளந்த பெரியோனின் நிகழ்வும் இணைத்துக் கூறப்படுதலைக் காணலாம். திருமால் உறையும் கோயிலை வலம் வரும் நிகழ்வினை

"அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த

மணிவண்ணன் கோட்டம் வலம் செயா" (Adiyarku Nallar, 1980)

என்னும் பாடலடி எடுத்துரைக்கிறது. திருமால் பாம்பணைமேல் துயிலும் சிறப்பு மிக்கவன் என்ற குறிப்பு இதில் இடம்பெற்றுள்ளது. கருடச் சேவை ஊர்தியாகக் கொண்டவன் திருமால் என்ற கருத்தினை,

"உவனச் சேவ லுயர்ந்தோன் நியமமும்" (Adiyarku Nallar, 1980)

என்னும் பாடலடி தெளிவுபடுத்துகிறது

"ஓங்குயர் மலையத் துயர்ந்தோற் றொழுது

சிந்தையின் அவன்தன் சேவடி வைத்து" (Adiyarku Nallar, 1980)

என்பதில், திருமாலிருங்குன்றத்தின் சிறப்பும் அதன் எழிலும், ஆங்கு வழிபாடுகள் நடத்தப்பட்டதும் கூறப்படுகிறது. புகார் நகரிலிருந்து திருமால் கோயில்களில் வேத நெறிப்படி ஓமங்கள் நடத்தி, நறும்புகை காட்டி வழிபாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், திருமால் கோயிலில் மலையை மும்முறை வலம்வந்து மக்கள் வழிபட்ட செய்தியும் பேசப்படுகின்றது. இறைவனுடைய கோயிலில்

எழுந்தருளியுள்ள இடமும் அவனது சயனத் திருக்கோலமும் பேசப்படுகின்றது. திருமால் வழிபாட்டின் சிறப்புகள் நாடுகாண் காதை, ஆய்ச்சியர் குரவை முதலிய காதைகள் எடுத்துரைக்கின்றன.

## முருக வழிபாடு

சங்கத் தமிழர் வாழ்வில் முருக வழிபாடு பல்லாயிரம் ஆண்டுகளாக வழக்கிலிருந்து வந்துள்ளது. முருக்க் கடவுள் குறிஞ்சி நிலத் தலைமைக் கடவுளாகவும் அவன் குறிஞ்சி நில மக்கள் வாழ்வியலோடு மிகநெருங்கிய வழிபாட்டுக்கு உரியவனாகவும் போற்றப்படுகிறது. முருகக் கடவுள் குறித்தும் அவனது கோயில்கள் குறித்தும் ஆங்கு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்ட முறைகள் குறித்தும் சிலப்பதிகாரம் பலவாறு எடுத்துரைக்கிறது.

"ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்" (Adiyarku Nallar, 1980)

என்பதில், குமாரக் கடவுள் ஆறுமுகங்களைக் கொண்டவன் என்ற கருத்து புலப்படுத்தப் படுகிறது. தமிழ்க்கடவுளர்களில் சேயோன் ஆகிய முருகப்பெருமாள் பல சொற்களால் விதந்துரைக்கப்படுபவன். இத்தகு சிறப்புமிகு முருகப்பெருமான் வீற்றிருக்கும் இடம் கோட்டம் என்ற சொல்லால் குறிக்கப்பட்டதனைச் சிலம்பு,

"வேற் கோட்டம்" (Adiyarku Nallar, 1980)

என்று குறிக்கப்படுகிறது. ஆங்கு வேலினை நட்டு வைக்கப்பட்டிருந்த நிகழ்வும், அங்கே மக்கள் தொழுதுநின்று வழிபாடுகள் செய்த நிகழ்வும் குறிக்கப்பட்டுள்ளது.

சேவற்கோழியை வாகனமாகக் கொண்டவன் திருமுருகன் என்ற பொருள்படும் விதத்தில்,

"கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்" (Adiyarku Nallar, 1980)

என்று குறிக்கப்படுவது தெளிவாகிறது. சங்கின் ஓசையும், முரசும் முருகன் கோயில் வழிபாட்டின் போது இசைக்கப்பட்ட திறத்தினை,

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்" (Adiyarku Nallar, 1980)

என்றும் குறிப்பிடுகிறது. வஞ்சிக்காண்டத்தில் குன்றக்குரவையில் முருகனுக்கு விழா எடுத்து வழிபட்டுள்ளனர்.

## வெறியாட்டு

முருகன் தொல்பழங்குடிகளின் கடவுளாகப் போற்றப்படுகிறான். முருகன் கண்டோரை மயக்கும் அழகு கொண்டவன். ஆதலால், அவன் அணங்குபவன் என்று சிறப்பிக்கப் பெறுகிறான். ஆகவே, முருகனுக்கு நிகழ்த்தப்பெறும் சடங்குகளில் வெறியாட்டு சிறப்பிடம் பெறுகிறது.

சிலப்பதிகாரக் காலகட்டத்தில், முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்தி வழிபாடு செய்துள்ளனர் என்ற வழிபாட்டுக் குறிப்புகளை,

"தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரே!

தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்

கொடுவாய் வைம்மின் கொடுமணி இயக்குமின்

குறிஞ்சிப் பாடுமின் நறும்புகை எடுமின்

பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்

பரவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்" (Adiyarku Nallar, 1980)

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. முருகனுக்கு எடுக்கப்படும் வெறியாட்டு விழாவில் முருகன் கையில் வில்லேந்தி ஆடுவதாகவும், அப்போது இன்னிசைக்கருவிகள் முழக்குவதாகவும் குறிக்கப்பெறுகிறது. வழிபாட்டின் போது தினையரிசி, மலர் போன்றவை தூவி வழிபாடுகள் செய்வதனையும், இவ்வழிபாட்டில் ஆடுகளைப் பலியிட்டதனையும் அறியமுடிகிறது.

## பத்தினித் தெய்வ வழிபாடு

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் காப்பிய நாயகியான கண்ணகியைப் பத்தினித் தெய்வமாக்கிப் பார்க்க வேண்டும் என்றும் கொள்கை உடையவராக உள்ளார். அதனால்,

"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல்" (Adiyarku Nallar, 1980)

எனத் தம் நோக்கத்தைப் புலப்படுத்தியுள்ளார். மதுரைக்காண்டத்தில் தன் கணவன் கள்வன் அல்லன் என்று நிரூபித்து மதுராபுரித் தெய்வத்தின் துணையோடு மதுரையைத் தீக்கிரையாக்கிவிட்டு, வஞ்சி மாநகரத்தில் தன் கணவனுடன் விண்ணுலகம் அடைகின்றான். இந்நிகழ்ச்சியை அறிந்த குன்றக்குறவர்கள் சேர மன்னான செங்குட்டுவனிடம் செய்தியைத் தெரிவிக்கின்றார்கள். அம்மன்னன் அமைச்சர்கள், வீரர்கள் முதலியவர்களின் துணைகொண்டு கனகவிசயரைத் தோற்கடித்து இமய மலையில் கல்லெடுத்துப் பத்தினித் தெய்வத்திற்குக் கோயில் கட்டுகின்றான். அவ்வாறு இமயமலையில் எடுத்த கல்லை நெறிப்படி யாகங்கள் செய்து வழிபடுகின்றனர்.

## சாத்தன் வழிபாடு

புகார் நகரத்தில் சாத்தனுக்குக் கோயில் இருந்த செய்தியைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. கனாத்திறம் உரைத்த காதையில் சூரியன் மறையும் மாலைப்பொழுதில் புகார் நகரில் இருந்த தமது இல்லங்களில் எல்லாம் முல்லையின் ஒளிமிக்க மலர்களை நெய்யுடன் கலந்து தூவினர் அங்கு அழகிய மணிவிளக்குகளை ஏற்றினர் என்ற வழிபாட்டு நிகழ்வுகளைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது.. இளைய மகளிர்கள் முல்லை மலரும், நெல்லும் தூவி விளக்கேற்றி இல்லுறை தெய்வமான சாத்தனை நாள்தோறும் வழிபாடு செய்தனர். அச்சாத்தனைக் கண்ணகியின் உற்ற தோழியான தேவந்தி என்பவள் கண்ணகியின் கணவன் கோவலன் மீண்டும் கண்ணகியை அடைய வேண்டும் என்று எண்ணி, மலர், அருகு போன்றவற்றைத் தூவி வழிபட்டாள் என்ற செய்தி,

"அகனக ரெல்லாம் அரும்பவிழ் முல்லை

நிகர்மலர் நெல்லொடு தூஉய் பகல்மாய்ந்த

மாலை மணிவிளக்கங் காட்டி இரவிற்கோர்

கோலங் கொடியிடையார் தாங்கொள்ள்" (Adiyarku Nallar, 1980)

என்னும் அடிகளின் மூலம் விளக்கப்படுகின்றது. இதனால், சாத்தன் வழிபாடு புகார் நகர மக்களோடு கலந்த ஒன்றாக விளங்கியிருப்பது தெளிவாகிறது.

## கொற்றவை வழிபாடு

மதுரைக்காண்டத்தில்,

"கொற்றவை வாயிற் பொற்றொடி தகர்த்து" (Adiyarku Nallar, 1980)

என்பதில், கொற்றவைக்கோயில் இருந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. கண்ணகி துயரம் தோய்ந்த நிலையில் கொற்றவை கோயில் வாசலில் தன் சங்கு வளையலை உடைத்துச் சாபமிட்டு வைகையாற்றின் கரைவழியாக வஞ்சியை நோக்கிச் சென்று பின் தெய்வநிலையை அடைந்தாள் என்று ஆசிரியர் கூறுகின்றார். இங்கு கொற்றவை வழிபாட்டு முறைகளையோ, அதன் சிறப்புக்களையோ

ஆசிரியர் குறிப்பிடவில்லை. ஆனால், கண்ணகி உருவத்தோற்றத்தில் கொற்றவை போல இருந்தாள் என்று குன்றக்குறவர்கள் வழிபட்டு மன்னனிடம் கூறிய செய்தியை அறியமுடிகின்றது.

## இயக்கி வழிபாடு

இயக்கி வழிபாடு மதுரைக்காண்டத்தில் அடைக்கலக்காதையில் காணப்படுகின்றது. இக்கோயில் மதுரையின் கிழக்குப்புற நகர்ப்பகுதியில் அமைந்திருந்ததாகத் தெரியவருகின்றது.

"அறம்புரி நெஞ்சிள் அறவோர் பல்கிய

புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்

பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்

ஆயர் முதுமகள் மாதரி என்போள்" (Adiyarku Nallar, 1980)

என்ற பாடல் வரிகள் மூலம் இயக்கி வழிபாடு பற்றி அறிய முடிகின்றது. புறஞ்சிறை மூதூரில் கோயில் கொண்டுள்ள இயக்கிக்குப் பாற்சோறு படைத்து வழிபாடு செய்யும் வழக்காறு இருந்தமை தெளிவாகிறது.

## பூத வழிபாடு

சிலப்பதிகாரத்தின் ஆதி பூதம், அரசபூதம், வணிகபூதம், வேளாண்பூதம் போன்ற பூதங்கள் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. இப்பூதங்கள் ஊரின் வெளிப்புறத்தில் காவல் தெய்வங்களாக இருந்தன. குற்றம் செய்தவர்களைப் பூதங்களே தண்டிக்கும் என்று நம்பினர்.

## முடிவுரை

சிலப்பதிகாரம் கோயில் வழிபாட்டினைக் குறிக்கின்றதே தவிர, நாள் வழிபாடு, வார வழிபாடு, மாத வழிபாடு என்று தனித்தனியே பிரித்து விளக்கவில்லை. சிலப்பதிகாரத்தில் சமயக்காழ்ப்புணர்ச்சியின்றி எல்லாத் தெய்வங்களுக்கும் வழிபாடு நிகழ்ந்தமையைக் காணமுடிகின்றது. பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு இரண்டும் சிலப்பதிகாரத்தில் காணமுடிகின்றது. தெய்வங்களில் பெருந்தெய்வம். சிறுதெய்வம் என்ற பாகுபாடு பார்க்கப்படவில்லை. சிலப்பதிகாரத்தில் குறிப்பாகப் பத்தினித் தெய்வத்திற்கு முதன்மை கொடுத்துள்ளமை தெளிவாகிறது. இன்றைய வழிபாட்டு முறைகள் பல்வேறு வளர்ச்சி நிலையை அடைந்திருந்த போதிலும், அவ்வழிபாட்டுக்குரிய அடிப்படைகளைச் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பூத வழிபாடு சிலப்பதிகாரத்தில் பேசப்படுள்ள இன்றைய நிலையில் அவ்வழிபாடு பழங்குடி மக்களிடம் மட்டும் வழக்கிலிருநது வருகிறது. இன்றைய காலகட்டத்தில் சமய ஒற்றுமையின் தேவை வலியுறுத்தப்பட்டு வந்துகொண்டுள்ளது. எனினும் பண்டைக்காலத் தமிழகத்தில் சமய ஒற்றுமை பேணப்பட்ட நிலமாகப் புகார நகரம் விளங்கியிருந்தமை அறியத்தக்க செய்தியாக அமைந்திருக்கிறது. வாழ்வியல் அறமுரைக்கும் சிலப்பதிகாரம், சமய அறத்திற்கும் சான்றாக விளங்குவது இதன்வழியாகத் தெளிவாகிறது.

## References

Adiyarku Nallar, (1980) Silapathikaram, Kalaga Veliyedu, Chennai, India

Srinivasan, R. (1975) Sakthi Valipadu, Star Press, Thirunelveli, India

Subramaniyan, N. (1965) Tamilaga Varalaru, New Century Book House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License